மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழகத்திலே உள்ள ஓட்டல்கள் எல்லாம் எந்த எந்த ஸ்டார்களின் கீழ் வரும் என்பதை வரையறுக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது வரையறுத்தவுடன் உறுப்பினர்களே அங்கங்கே போய் அறிந்துகொள்ள முடியும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சட்டமன்ற உறுப்பினர் விடுதி எந்த ஸ்டாரைப் பெற்றிருக்கிறது ? (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சூப்பர் ஸ்டாராக வரலாம்.

**சுற்றுலா மையங்கள்**

*833 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் சுற்றுலா கேந்திரங்களாக (Tourist Centres) எந்தெந்த நகரங்கள் உள்ளன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : விவர அறிக்கை ஒன்று மேசைமீது@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : இந்தப் பட்டியலில் சென்னை நகரம் இடம் பெற்றிருக்கிறது. திருச்சி நகரமும் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னைக்கு அடுத்த மாநகராட்சி யாக இருக்கும் மதுரை இங்கே குறிப்பிடப்படவில்லை. மதுரைக்கு தினசரி பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். மதுரை நகரத்தையும் ஒரு சுற்றுலா கேந்திரமாக அமைப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை மத்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டவைதான். நாம் சுற்றுலா வாரியம் என்று அமைத்து அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள் ஆகியவர்களைச் சந்தித்து எந்த எந்த இடங்களை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கலாம் என்பது பரிசீலிக் கப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு எல்லா இடங்களும் நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பழனிவேலன் : நாமக்கல்லுக்குப் பக்கத்தில் உள்ள கொல்லி மலையில் அறப்பள்ளீசுவரர் கோயில் இருக்கிறது. ஒரு நீர்வீழ்ச்சியும் இருக்கிறது. நாமக்கல் ஒரே கல்லிலான மலை—திப்புசுல்தான் கட்டிய கோட்டை இருக்கிறது. புகழ்பெற்ற பல்லவர் குகைக்கோயில்கள் இருக் கின்றன. ஒரு அனுமார் கோயில் இருக்கிறது . . . .

---

@ 115-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாமக்கல்லைப்பற்றி உங்களுக்கும் தெரியும், அமைச்சருக்கும் தெரியும். நாமக்கல்லை ஒரு சுற்றுலா கேந்திரமாக அமைப்பார்களா என்று கேள்வியைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தமிழ்நாட்டில் பல இடங்கள் இருக்கின்றன. திருத்தலங்கள், சரித்திரப் புகழ்பெற்ற கோட்டைகள், இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி கட்டப்பட்ட கோயில்கள்—புழலேரிக்குப் பக்கத்தில் உள்ள கோயில் அதுபோன்றது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்—எல்லாம் இருக்கின்றன. எல்லாம் வளர்ச்சிபெறுகிற காலத்தில் நாமக்கல்லும் வளர்ச்சிபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *First-aid Boxes in Taxis*

* 834 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the police in Madras City is aware that taxis and other public carriers do not keep first-aid boxes in their vehicles; and

(*b*) if so, the steps taken thereon ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) வாடகை வண்டிகளில் முதலுதவிப் பெட்டிகளைப் பொருத்த வலியுறுத்தப்படுகின்றனர். பொருத்த தவறியவற்றின் மீது வழக்கு தொடரப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ் :** இது சம்பந்தமாக ஒழுங்கான செக்கிங் நடக்கவில்லை என்கிற புகார்களுக்கு இடம் கொடுக்காமல் தக்க முறையில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இது சம்பந்தமாக ஒழுங்காக நடவடிக்கை எடுத்திருப்பதினுல்தான் 1971-ஆம் ஆண்டில் 250 லாரிகளும். 35 பேருந்துகளும், 19 வாடகை வண்டிகளும் இந்தக் குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

## *Automatic signal lights in Madras*

* 835 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras City Police and made arrangements to synchronise the automatic signals at Madras City to regulate vehicular traffic; and

(*b*) if so, the details thereof?